# வணிகவரி மற்றும் பதிவுத் துறை

# மானியக் கோரிக்கை எண் 11
# முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2018–2019


**கே.சி. வீரமணி**
**வணிகவரித் துறை அமைச்சர்**



(C)
தமிழ்நாடு அரசு
**2018**

<u>பொருளடக்கம்</u>


| வரிசை எண் | பொருள் | பக்கம் எண் |
| --- | --- | --- |
| 1 | முன்னுரை | 1–4 |
| 2 | துறையின் அமைப்பு | 4–5 |
| | 2.1 பதிவு மண்டலங்கள் | 5–7 |
| | 2.2 உதவி பதிவுத் துறைத் தலைவர் அலுவலகங்கள் | 7 |
| | 2.3 பதிவு மாவட்டங்கள் | 8 |
| | 2.4 தணிக்கை அலகுகள் | 8–9 |
| | 2.5 சார்பதிவாளர் அலுவலகங்கள் | 9–10 |
| | 2.6 புலனாய்வுப் பிரிவு | 11 |
| | 2.7 பதிவுத் துறை பயிற்சி மையம் | 11–12 |
| 3 | துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள் | 13 |
| | அ) முழுமையாக நிர்வகிக்கப்படும் சட்டங்கள் | 13 |
| | ஆ) பகுதியாக நிர்வகிக்கப்படும் சட்டங்கள் | 13–14 |

| | | |
|---|---|---|
| 4 | பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் ஈட்டப்பட்ட வருவாய் | 14–15 |
| | 4.1 மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோரின் செயல்பாடு | 16–18 |
| | 4.2 சந்தை மதிப்பு வழிகாட்டி | 18–19 |
| 5 | உள்ளாட்சி அமைப்புகளுக்கு முத்திரைத் தீர்வையின் மீதான மிகுவரியை பகிர்ந்தளித்தல் | 20 |
| 6 | பதிவுச் சட்டம், 1908 | 20 |
| | 6.1 அரசின் சொத்துக்கள் மற்றும் அங்கீகாரம் பெறாத மனைப் பிரிவுகளை பதிவு செய்ய தடை | 20–21 |
| 7 | துணைமைப் பணிகள் | 21 |
| | 7.1 சங்கங்கள் | 21–22 |
| | 7.2 சீட்டுகள் | 23 |
| | 7.3 கூட்டுப் பங்காண்மை நிறுவனங்கள் | 24 |
| | 7.4 முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் | 24–25 |

| | | |
|---|---|---|
| | 7.5 ஆவண எழுத்தர்கள் | 25–26 |
| | 7.6 திருமணப் பதிவு | 27 |
| 8 | துறையில் தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி | 28 |
| | 8.1 இணையம் சார்ந்த ஒருமித்த மென்பொருள் உருவாக்கம் | 28–29 |
| | 8.1.1 ஸ்டார் 2.0–ல் முதன்மையான சிறப்பம்சங்கள் | 29–33 |
| | 8.2 இணைய நெறிமுறை புகைப்படக் கருவிகள் (IP camera) | 33 |
| | 8.3 இணையவழியாக பணம் வங்கிகளில் செலுத்திடும் முறை | 34 |
| | 8.4 வில்லங்கச்சான்று எவ்விதக்கட்டணமுமின்றி இணையதளத்தில் பார்வையிடும் வசதி | 34–35 |
| | 8.5 இணையவழி முன்பதிவு (e-visit) | 35–36 |
| | 8.6 மின்னணு பதிப்பு முறை (e-Stamping) | 36–38 |

| | | |
|---|---|---|
| | 8.7 வலை நிழலி (Web-Cam) மற்றும் மின்னணு ரேகைக் கருவி (Bio metric device) | 38 |
| | 8.8 CUG இணைப்புகள் (CUG connections) | 39 |
| 9 | துறையின் உள்கட்டமைப்பு மற்றும் வசதிகளில் மேம்பாடு | 39 |
| | 9.1 கட்டடங்கள் கட்டுதல் | 39–40 |
| | 9.2 தீயணைப்பாண்கள் வழங்குதல் | 40–41 |
| 10 | தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 | 41 |

# வணிகவரி மற்றும் பதிவுத்துறை

# மானியக் கோரிக்கை எண்.11

# முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு

# கொள்கை விளக்கக் குறிப்பு 2018–2019

## முன்னுரை

பதிவுத்துறை மாநில ஆட்சி நிருவாகத்தில் மிகவும் பழமை வாய்ந்த துறைகளில் ஒன்று என்ற பெருமையான மரபினைக் கொண்டது. சுதந்திர இந்தியாவிற்கு முன்பே, அதாவது 1864–ஆம் ஆண்டிலிருந்தே இத்துறை தனது செயல்பாடுகளைத் துவக்கியது. தமிழ்நாடு அரசின் கீழ் செயல்படும் பல துறைகளுள், பதிவுத்துறை மக்களுக்கு வழங்கும் சேவைகளில் புதிய தொழில்நுட்பத்தைப் புகுத்தி முன்னேற்றம் கண்டதில் அரசின் முகப்புத் துறையாக உருவெடுத்துள்ளது. பதிவுத்துறை பொதுமக்களிடம் நேரடி தொடர்புடைய முக்கியத்துவம் வாய்ந்த துறையாக விளங்குவதுடன் அவர்களோடு நெகிழ்ச்சியான நெடும் பயணத்தைக் கடந்துள்ளது. ஒரு சாமானிய மனிதன் தனது வாழ்நாள் முழுவதும் தனது வாழ்வோடு இணைந்த

நிகழ்வுகள் அனைத்திலும் இனிய அனுபவம் பெறுவதில் பதிவுத்துறையின் பங்கு இன்றியமையாதது. சொத்து பரிவர்த்தனை தொடர்பாக பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள், திருமணப் பதிவு மற்றும் பிறப்பு, இறப்பு பதிவு ஆவணங்கள் ஆகியவற்றின் காப்புப் பொறுப்பாளராக பதிவுத்துறை விளங்குகிறது. பதிவுத்துறையால் அளிக்கப்படும் ஆவணங்களின் நகல்கள் நீதிமன்றங்களில் சாட்சி ஆவணங்களாக சமர்ப்பிக்க ஏதுவாக உண்மைத்தன்மை வாய்ந்தவையாகவும், போலி ஆவணங்கள் மூலம் சொத்து அபகரிப்பு முறைகேடுகளிலிருந்து தடுப்பதாகவும் உள்ளன. ஆவணப்பதிவு என்பது பொதுமக்களுக்கு அதிகாரப்பூர்வமாக பதிவு செய்யப்பட்ட ஒரு தகவலை அறிவிப்பு செய்வதாகவும், அதன் மூலம் எந்த ஒரு அசையாச் சொத்து மீதான அவர்களது உரிமை பாத்தியம் மற்றும் கடப்பாடு ஆகியவற்றை கண்டறிய ஏதுவாகவும் அமைகிறது. ஆகவே சொத்து பரிவர்த்தனை ஆவணப்பதிவு, திருமணப்பதிவு, சீட்டு, சங்கம் மற்றும் பிறப்பு, இறப்பு பதிவு ஆகியவை ஒவ்வொருவரின் வாழ்விலும் தவிர்க்க முடியாத நிகழ்வாக அமைகிறது.

மாநிலத்திற்கான வருவாயை ஈட்டித்தருவதில் வணிகவரித்துறைக்கு அடுத்தபடியாக பதிவுத்துறை விளங்குகிறது.

பதிவுத்துறை துரித முறையில் துறையை நவீனப்படுத்தும் நோக்கில், துறையின் முழுச் செயல்பாடுகளையும் கணினி மற்றும் மின்னணுமயமாக்குவதில் முன்னோடியாக திகழ்ந்து, துறையுடனான தொடர்பின் போது பொது மக்களுக்கு தடையில்லா சேவைகளை வழங்குவதில் பெரிய முன்னேற்றம் கண்டுள்ளது.

எளிய மற்றும் வெளிப்படையான முறையில் துறையின் சேவைகளை பொதுமக்களுக்கு அளிக்கும் வகையில் அவர்களது சொத்து மற்றும் இதர ஆவணப் பதிவு தொடர்பான விவரங்களை உலகில் எங்கிருந்தும் சரிபார்த்துக்கொள்ள ஏதுவாக தேவையான எளிய வழிமுறைகள் பதிவுத்துறை இணையதளத்தில் உள்ளன.

**1865–66**ஆம் ஆண்டில், **1.25** இலட்சம் ஆவணங்களை பதிவு செய்ததன் மூலம் ரூ.**1.43** இலட்சம் வருவாயை பதிவுத்துறை ஈட்டியது. **2017–18**–ஆம் நிதி

ஆண்டில் **22.11** இலட்சம் ஆவணங்களை பதிவு செய்ததன் மூலம் ரூ.**9121.53** கோடி வருவாயை ஈட்டியுள்ளது. இது துறையின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் சாட்சியாக அமைந்துள்ளது.

## 2. துறையின் அமைப்பு

துறையின் தலைவராக பதிவுத் துறைத் தலைவர் உள்ளார். அவரின் அலுவலகம் சென்னை சாந்தோமில் உள்ளது. பதிவுத் துறைத் தலைவருக்கு உதவியாக நான்கு இரண்டாம் நிலை அலுவலர்களின் பதவியும் அவர்களால் கவனிக்கப்படும் பொருண்மைகளின் விவரங்களும் பின்வருமாறு:

- கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (முத்திரை மற்றும் பதிவு) – இந்திய முத்திரைச் சட்டம், பதிவுச் சட்டம் தொடர்பான பொருண்மைகள் மற்றும் கணினிமயமாக்கல்.
- கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (வழிகாட்டி) – வழிகாட்டி மதிப்பை திருத்தியமைத்தல், **1899** ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டப்

பிரிவு 47A(5), 47A(6) மற்றும் 56(2) தொடர்பான நேர்வுகள்.

- கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (புலனாய்வு) – திருமணப்பதிவு, தணிக்கை இனங்கள், கட்டட ஆய்வுகள் மற்றும் பணியாளர்கள் மீதான புகார் குறித்து விசாரணைகள் போன்றவை.
- கூடுதல் சீட்டுப் பதிவாளர் – சீட்டுகள், சங்கங்கள் மற்றும் துறையின் உள்கட்டமைப்பு.

பொதுமக்களுக்கு வசதியை ஏற்படுத்தவும், எளிதான அணுகுமுறையை உறுதி செய்யவும் துறையானது பல்வேறு பதிவு மண்டலங்களாக ஒருங்கமைக்கப்பட்டு அதிக எண்ணிக்கையிலான கள அலுவலகங்களைக் கொண்டுள்ளது.

## 2.1 பதிவு மண்டலங்கள்

மாநிலம், பல பதிவு மாவட்டங்களாக பிரிக்கப்பட்டு, அவ்வாறான பல பதிவு மாவட்டங்கள் மண்டலமாக ஒருங்கிணைக்கப்பட்டு துணைப் பதிவுத் துறைத்

தலைவரின் கீழ் செயல்படுகின்றது. பின்வரும் 9 பதிவு மண்டலங்கள் உள்ளன:-

| வ. எண் | பதிவு மண்டலம் | பதிவு மண்டலத்தின் வரம்பிற்குள் உள்ள பதிவு மாவட்டங்கள் |
|---|---|---|
| 1. | சென்னை | சென்னை (வடக்கு), சென்னை (தெற்கு), மத்திய சென்னை, செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம். |
| 2. | வேலூர் | வேலூர், செய்யார், அரக்கோணம் மற்றும் திருவண்ணாமலை. |
| 3. | கடலூர் | கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, சிதம்பரம், திண்டிவனம் மற்றும் விருத்தாச்சலம். |
| 4. | சேலம் | சேலம் (கிழக்கு), சேலம் (மேற்கு), கிருஷ்ணகிரி, நாமக்கல் மற்றும் தர்மபுரி. |
| 5. | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி, அரியலூர், கரூர் மற்றும் புதுக்கோட்டை. |
| 6. | தஞ்சாவூர் | தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, பட்டுக்கோட்டை மற்றும் கும்பகோணம். |

| | | |
|---|---|---|
| 7. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், திருப்பூர், உதகமண்டலம், ஈரோடு மற்றும் கோபிசெட்டிபாளையம். |
| 8. | மதுரை | மதுரை (வடக்கு), மதுரை (தெற்கு), திண்டுக்கல், பழனி, பெரியகுளம், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் மற்றும் காரைக்குடி. |
| 9. | திருநெல்வேலி | திருநெல்வேலி, பாளையங்கோட்டை, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, சேரன்மகாதேவி மற்றும் மார்த்தாண்டம். |

## 2.2 உதவி பதிவுத்துறைத் தலைவர் அலுவலகங்கள்

துணைப்பதிவுத்துறைத் தலைவருக்கு உதவியாக சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய நான்கு இடங்களில் உதவி பதிவுத் துறைத் தலைவர்கள் உள்ளனர்.

## 2.3 பதிவு மாவட்டங்கள்

மாநிலம், 50 பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, அவற்றில் அதிகப் பதிவு பணிச்சுமை உள்ள 13 மாவட்டங்கள் நிலை உயர்த்தப்பட்டு அவை உதவி பதிவுத் துறைத் தலைவர் தலைமையில் நிர்வகிக்கப்படுகின்றன. எஞ்சியுள்ள 37 பதிவு மாவட்டங்கள் மாவட்டப் பதிவாளர்களின் தலைமையில் செயல்படுகின்றன. உதவி பதிவுத் துறைத் தலைவர்கள்/ மாவட்டப் பதிவாளர்கள், தங்களது ஆட்சி எல்லைக்குள், சங்கங்களின் பதிவாளராகவும், துணைச் சீட்டுப் பதிவாளராகவும், திருமணப் பதிவாளராகவும் மற்றும் கூட்டுப் பங்காண்மை நிறுவனங்களின் பதிவாளராகவும் செயல்படுகின்றனர். அவர்கள் முத்திரைத் தாள் விற்பனையாளர்களுக்கு உரிமம் வழங்குகின்ற பணியினையும் மேற்கொள்கின்றனர்.

## 2.4 தணிக்கை அலகுகள்

அதிக வருவாயினை ஈட்டித் தரும் துறையாக பதிவுத்துறை உள்ளதால் அதன் கள அலுவலகங்களில் செய்யப்படும் பணிகளை தொடர்ச்சியாக தணிக்கை

செய்வதற்கு, வலுவான தணிக்கைப் பிரிவு இருப்பது மிக முக்கியமானதாகும். துறையின் தணிக்கைப் பிரிவு 45 தணிக்கை அலகுகளைக் கொண்டு, ஒவ்வொன்றும் ஒரு மாவட்டப் பதிவாளரின் தலைமையில் இயங்குகின்றது. இந்த தணிக்கை அலகுகள் பதிவு செய்யப்பட்டும் ஆவணங்கள் அனைத்தையும் நூறு சதவிகிதம் தணிக்கை செய்கின்றன. இந்த அலகுகள் குறைகள் மற்றும் வருவாய் இழப்புகளை கண்டறிகின்றன. வருவாய் இழப்புகளை வசூலிப்பதற்கும் இவை முக்கியப் பணியாற்றுகின்றன. தணிக்கை மாவட்டப் பதிவாளரின் செயல்பாடுகளைக் கண்காணிப்பது ஒவ்வொரு மண்டலத்தின் துணைப் பதிவுத்துறைத் தலைவரின் பொறுப்பாகும்.

## 2.5 சார்பதிவாளர் அலுவலகங்கள்

பரப்பளவு மற்றும் மக்கள் தொகையில் ஒரே மாதிரியாக உள்ள இதர மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழ் நாட்டில் பொது மக்கள் எளிதாக அணுகுவதற்கு ஏதுவாக அதிக எண்ணிக்கையில் சார்பதிவாளர் அலுவலகங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. மாநிலம்

முழுவதிலும் உள்ள **578** சார்பதிவாளர் அலுவலகங்களில் மூன்று முகாம் அலுவலகங்கள் (மேட்டூர் சார்பதிவகத்துடன் இணைந்துள்ள குளத்தூர், சேந்தமங்கலம் சார்பதிவகத்துடன் இணைந்துள்ள கொல்லிமலை மற்றும் கொம்மடிக்கோட்டை சார்பதிவகத்துடன் இணைந்துள்ள படுக்கப்பத்து) உள்ளன. செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் இம்முகாம் அலுவலகங்களிலும், பிற நாள்களில் தங்களது முதன்மை அலுவலகங்களிலும் தொடர்புடைய சார்பதிவாளர்கள் பணிபுரிகின்றனர்.

ஆவணங்களின் பதிவு, பல்வேறு திருமணச் சட்டங்களின் கீழ் திருமணங்கள் பதிவு ஆகியவை சார்பதிவாளர்களின் முக்கியமான கடமைகளாகும். இதைத் தவிர, ஊராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளுக்கான பிறப்பு மற்றும் இறப்புப் பதிவேடுகளின் பாதுகாவலராகவும், **1982**–ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டத்தின் கீழ் உதவி பதிவாளர்களாகவும் செயல்படுகின்றனர்.

## 2.6 புலனாய்வுப் பிரிவு

அசையாச் சொத்து தொடர்பான ஆவணம் எழுதப்படும் போது அவற்றில் உள்ள கட்டடம் தொடர்பான விவரங்கள் தெரிவிக்கப்பட வேண்டும். முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் கட்டடப் பகுதிக்கும் சேர்த்து விதிக்கப்படவேண்டுமென்பதால், கட்டட மதிப்பிற்கு ஏற்றவாறு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் வசூலிப்பதை உறுதி செய்திட புலனாய்வுப் பிரிவு ஒன்று செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு, கூடுதல் பதிவுத் துறைத் தலைவரை (புலனாய்வு) தலைவராகவும், கட்டடங்களின் சரியான மதிப்பீடு உறுதி செய்யும் பொருட்டு இரண்டு உதவி செயற்பொறியாளர்களையும் கொண்டு செயல்படுகிறது.

## 2.7 பதிவுத் துறை பயிற்சி மையம்

பதிவுத் துறையில் அதிக அளவில் சட்டங்கள் நிர்வகிக்கப்படுவதால், அவற்றின் பல்வேறு வகைமுறைகளையும் மற்றும் தொடர்புடைய இதர வழிமுறைகளையும் துறையின் அலுவலர்களும் பணியாளர்களும் நன்கு தெரிந்து செயல்பட வேண்டியது

அவசியமாகிறது. சட்டமுறையின் மாறுபாட்டிற்குப் பொருந்தும் விதத்தில் அவ்வப்போது இச்சட்டங்களில் பல்வேறு திருத்தங்கள் செய்யப்படுகின்றன. மேலும், துறையின் அன்றாட செயல்பாட்டில் தகவல் தொழில்நுட்பப் பயன்பாடு பெருமளவில் உள்ளது. எனவே, இவ்விவரங்கள் தொடர்பாக அனைத்துப் பணியாளர் மற்றும் அலுவலர்களுக்கு உரிய அறிமுக மற்றும் பணியிடைப் பயிற்சி வழங்குதல் இன்றியமையாததாக அமைந்துள்ளது.

இந்த நோக்கத்தினை நிறைவேற்றிட, **1996**-ஆம் ஆண்டு முதல் சென்னையில் பதிவுத் துறைப் பயிற்சி மையம் செயல்பட்டு வருகின்றது. துணைப் பதிவுத் துறைத் தலைவர் நிலை அலுவலரின் தலைமையில் இம்மையம் செயல்படுகிறது. இந்த மையத்தில் பயிற்சி பெற வருபவர்கள் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் வருவதால் அவர்களுக்கென தங்கும் விடுதி அமைக்கப்பட்டுள்ளது. பதிவுத் துறைப் பயிற்சி மையத்தை நவீனப்படுத்திடவும் பயிற்சி நடைமுறைகளை மேம்படுத்திடவும் தொடர் செலவினமாக ரூ.**30** இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 3. துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்கள்

பதிவுத் துறை கீழ்க்காணும் பதின்மூன்று சட்டங்களை நிர்வகிக்கின்றது:—

### அ) முழுமையாக நிர்வகிக்கப்படும் சட்டங்கள்

1. **1899**-ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் **2/1899**)

2. **1908**-ஆம் ஆண்டு பதிவுச் சட்டம் (மத்தியச் சட்டம் **16/1908**)

3. **1975**-ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் **27/1975**)

4. **1982**-ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் (மத்தியச் சட்டம் **40/1982**)

### ஆ) பகுதியாக நிர்வகிக்கப்படும் சட்டங்கள்

1. **1872**-ஆம் ஆண்டு இந்திய கிறித்துவ திருமணச் சட்டம் (மத்தியச் சட்டம் **15/1872**)

2. **1886**-ஆம் ஆண்டு பிறப்பு, இறப்பு மற்றும் திருமணங்கள் பதிவுச் சட்டம் (மத்தியச் சட்டம் **6/1886**)

3. **1932-**ஆம் ஆண்டு பார்சி திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டம் **(**மத்தியச் சட்டம் **2/1932)**

4. **1932-**ஆம் ஆண்டு இந்திய கூட்டுப் பங்காண்மைச் சட்டம் **(**மத்தியச் சட்டம் **9/1932)**

5. **1954-**ஆம் ஆண்டு சிறப்பு திருமணச் சட்டம் **(**மத்தியச் சட்டம் **43/1954)**

6. **1955-**ஆம் ஆண்டு இந்துத் திருமணச் சட்டம் **(**மத்தியச் சட்டம் **25/1955)**

7. **1961-**ஆம் ஆண்டு வரதட்சணைத் தடுப்புச் சட்டம் **(**மத்தியச் சட்டம் **28/1961)**

8. **1969-**ஆம் ஆண்டு பிறப்பு மற்றும் இறப்புச் சட்டம் **(**மத்தியச் சட்டம் **18/1969)**

9. **2009-**ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம் **(**தமிழ்நாடு சட்டம் **21/2009)**

## 4. பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் ஈட்டப்பட்ட வருவாய்

விற்பனை, பரிவர்த்தனை, தானம், அடமானம் போன்ற ஆவணப் பதிவுகளுக்கு முத்திரைத்தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது**.** மேலும் இந்து திருமணப் பதிவு, சிறப்பு திருமணப் பதிவு, சங்கம்

மற்றும் சீட்டுப்பதிவு, கூட்டு வணிகப்பதிவு, வில்லங்கச்சான்று மற்றும் நகல் வழங்குதல், பிறப்பு மற்றும் இறப்பு சான்று வழங்குதல் ஆகியவற்றின் மூலமும் வருவாய் ஈட்டப்படுகிறது.

**2007–2008 ஆம் ஆண்டிலிருந்து பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் ஈட்டப்பட்ட வருவாய் விவரம் பின்வருமாறு:-**

| ஆண்டு | வருவாய் (கோடியில்) | வளர்ச்சி விகிதம் | ஆவணங்களின் எண்ணிக்கை | வளர்ச்சி விகிதம் |
|---|---|---|---|---|
| 2007–08 | 4232.36 | 24.21% | 2691002 | 7.97% |
| 2008–09 | 4099.54 | –3.14% | 2832686 | 5.27% |
| 2009–10 | 3818.25 | –6.86% | 2731026 | –3.59% |
| 2010–11 | 5020.50 | 31.49% | 3280503 | 20.12% |
| 2011–12 | 6619.98 | 31.86% | 3518435 | 7.25% |
| 2012–13 | 7455.41 | 12.62% | 2690351 | –23.54% |
| 2013–14 | 8055.74 | 8.05% | 2653291 | –1.38% |
| 2014–15 | 8279.64 | 2.78% | 2573931 | –2.99% |
| 2015–16 | 8562.38 | 3.41% | 2528561 | –1.76% |
| 2016–17 | 7007.74 | –18.16% | 2027916 | –19.80% |
| 2017–18 | 9121.53 | 30.16% | 2210595 | 9.01% |

## 4.1 மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)/ தனித்துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோரின் செயல்பாடு

இந்திய முத்திரைச் சட்டப்பிரிவு 47A(1)—ன் படி விற்பனை, பரிமாற்றம், தானம் மற்றும் ஏற்பாடு ஆகிய ஆவணங்கள் பதிவிற்கு அவற்றிலுள்ள சொத்தின் சந்தை மதிப்பின் அடிப்படையில் முத்திரைத் தீர்வை செலுத்தப்பட வேண்டும். பதிவு அலுவலர் ஆவணத்தில் சொல்லப்பட்ட மதிப்பு சந்தை மதிப்பினை பிரதிபலிக்கவில்லை எனக் கருதுவாராயின், இந்திய முத்திரைச் சட்டப்பிரிவு 47A(1)—ன் படி சரியான சந்தை மதிப்பு மற்றும் செலுத்தத்தக்க முத்திரைத் தீர்வையை நிர்ணயிக்க அந்த ஆவணத்தை சம்பந்தப்பட்ட மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை) அவர்களுக்கு அனுப்ப வேண்டும். அவர் கள ஆய்வு செய்து சொத்தின் சந்தை மதிப்பினை நிர்ணயிப்பார். மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோரால் நிர்ணயிக்கப்படும் குறைவு முத்திரைத் தீர்வை ஆவணதாரரால் இறுதி ஆணை பிறப்பித்ததிலிருந்து 2 மாதங்களுக்குள் செலுத்தப்படவில்லையென்றால் குறைவு முத்திரைத்

தீர்வையை வசூலிக்க அந்த ஆவணம் வருவாய் வசூல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க அனுப்பிவைக்கப்படும்.

ஆவணதாரர் மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)/ தனித்துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோரின் இறுதியாணை மீது ஆட்சேபணை இருப்பின், இந்திய முத்திரைச் சட்டப்பிரிவு 47A(5)–ன் கீழ் பதிவுத்துறைத்தலைவரிடமும் மற்றும் இந்திய முத்திரைச் சட்டப்பிரிவு 47A(10)–ன் கீழ் உயர்நீதிமன்றத்திலும் பரிகாரம் தேடிக் கொள்ளலாம். மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோரால் பிறப்பிக்கப்பட்ட ஆணையை பதிவுத்துறைத் தலைவர் இந்திய முத்திரைச் சட்டப்பிரிவு 47A(6)–ன் கீழ் தன்னிச்சையாக சீராய்வு நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

இந்திய முத்திரைச் சட்டப்பிரிவு 47A(1)–ன் கீழ் 2017–2018–ல் வசூலிக்கப்பட்ட தொகை விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியருக்கு (முத்திரை) அனுப்பப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை | **10831** |
| இறுதியாணை பிறப்பிக்கப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை | **20100** |
| குறைவு முத்திரைத் தீர்வை வசூலிக்கப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை | **10866** |
| வசூலிக்கப்பட்ட குறைவு முத்திரைத் தீர்வை | ரூ.**92.33** கோடி |

**4.2 சந்தை மதிப்பு வழிகாட்டி**

சந்தை மதிப்பு வழிகாட்டி **1.4.2012** முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. **3.97** கோடி சர்வே எண்களுக்கும், **1.84** இலட்சம் தெருக்களுக்குமான சந்தை வழிகாட்டி மதிப்புகள் பதிவுத்துறையின் இணையதளமான https://tnreginet.gov.in –இல் வெளியிடப்பட்டுள்ளது.

சந்தை மதிப்பு வழிகாட்டி சரியாக உள்ளதை உறுதி செய்ய பதிவுத்துறைத்தலைவர் தலைமையில் மதிப்பீட்டுக்குழுவும், மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில்

மதிப்பீட்டுத் துணைக் குழுக்களும் செயல்படுகின்றன. சந்தை வழிகாட்டி மதிப்புகளை அவ்வப்போது சீராக்கம் செய்ய தேவையான நடவடிக்கைகளை இக்குழுக்கள் மேற்கொள்கின்றன.

பொதுமக்களின் நன்மை கருதி உள்ளாட்சித் துறை மற்றும் வருவாய்த் துறை அலுவலர்களுடன் இட ஆய்வுகள் செய்யப்பட்டு சந்தை மதிப்பு வழிகாட்டியில் முரண்பாடுகள் இருப்பின் அவை உடனுக்குடன் களையப்பட்டு வருகின்றன.

பொதுமக்களின் ஒருமித்த கருத்திற்கு ஏற்ப, மதிப்பீட்டுக்குழுவால் மாநிலம் முழுமைக்கான சந்தை மதிப்பு வழிகாட்டியில் ஒரே சீராக 33% அளவுக்கு குறைத்து 9.6.2017 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த நடவடிக்கை பொதுமக்களிடையே பெருத்த வரவேற்பினைப் பெற்றுள்ளது. விற்பனை, தானம், பரிமாற்றம் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் அல்லாத நபர்களுக்கிடையே செய்து கொள்ளும் ஏற்பாடு போன்ற ஆவணங்களுக்கான பதிவுக் கட்டணம் 9.6.2017 முதல் 1% லிருந்து 4% ஆக மாற்றி நிர்ணயிக்கப்பட்டது.

## 5. உள்ளாட்சி அமைப்புகளுக்கு முத்திரைத் தீர்வையின் மீதான மிகுவரியை பகிர்ந்தளித்தல்

முத்திரைத் தீர்வை மீதான மிகுவரி, உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்து அளிக்கப்படுகிறது. **2017–2018–**ம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட மிகுவரி ரூ.**1345.49** கோடி. இதில் ரூ.**40.36** கோடி **(3%)** வசூல் கட்டணமாக பதிவுத் துறையால் இருத்திக் கொள்ளப்பட்டு, எஞ்சிய ரூ.**1305.13** கோடி **(97%)** உள்ளாட்சி அமைப்புகளுக்கு அவற்றின் பங்காக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## 6. பதிவுச் சட்டம், 1908

### 6.1 அரசின் சொத்துக்கள் மற்றும் அங்கீகாரம் பெறாத மனைப்பிரிவுகளை பதிவு செய்ய தடை

பதிவுச்சட்டம் **1908–**ல் பிரிவு 22A உட்சேர்க்கப்பட்டு, அதன்படி, அரசு மற்றும் சமய தொடர்பான நிறுவனங்களுக்கு சொந்தமான நிலங்களின் விற்பனை மற்றும் அங்கீகாரம் இல்லாத மனைகளின் விற்பனை தொடர்பான கீழ்க்கண்ட ஆவணங்களின்

பதிவினை தடை செய்ய அச்சட்டத்தின் பிரிவுகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது:-

(அ) அரசு, உள்ளாட்சி அமைப்புகள், இந்து சமய அறநிலையத்துறை, பூதான் மற்றும் வக்ஃப் போர்டு ஆகியவற்றுக்கு சொந்தமான நிலங்கள்.

(ஆ) உரிய திட்ட அமைப்பிடமிருந்து அனுமதி பெறாமல் வீட்டு மனைகளாக மாற்றப்பட்ட விவசாய நிலங்கள்; வீட்டு மனைகள் அங்கீகாரம் பெறப்படாதிருப்பினும், அவை ஏற்கனவே வீட்டுமனைகளாக பதிவு செய்யப்பட்டதாக இருப்பின், மேற்படி வீட்டு மனைகள் பதிவு செய்யப்படலாம்.

(இ) வாங்கியவரின் ஒப்புதல் இன்றி இரத்து செய்யப்படும் கிரைய ஆவணம்.

## 7. துணைமைப் பணிகள்

### 7.1 சங்கங்கள்

மாநிலத்தில் உள்ள இலக்கிய, விஞ்ஞான, சமய, தொண்டு, விளையாட்டு மற்றும் பிற பிரிவுகளிலுள்ள அமைப்புகளை சங்கங்களாக பதிவு செய்ய **1975**–ம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம்

வழிவகுக்குகிறது. இச்சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னர், **1860–**ம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அனைத்து வகை சங்கங்களையும் தமிழ்நாடு சட்ட விதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்டதாக கருதலாம். மாநிலத்தில் **31.3.2018–**ல் **1,67,100** பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் செயல்பாட்டில் உள்ளன.

ஒவ்வொரு சங்கமும் அதனை நிர்வகிக்க குறைந்த பட்சம் **3** உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவினை பெற்றிருக்க வேண்டும் மற்றும் அவ்வுறுப்பினர்களின் பதவி காலம் மூன்று ஆண்டுகளுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். ஒவ்வொரு சங்கமும் நிதி ஆண்டிற்கு குறைந்தது ஒரு முறையாவது பொதுக்குழு கூட்டம் நடத்தி இருக்க வேண்டும். ஒவ்வொரு சங்கமும் நிதியாண்டு முடிவடைந்த ஆறு மாதங்களுக்குள் பொதுக்குழுக் கூட்டத்தைக் கூட்டி ஆண்டறிக்கைகளுக்கு ஒப்புதல் பெற்று அவ்வாவணங்களை ஒப்புதல் பெற்ற நாளிலிருந்து **6** மாதங்களுக்குள் தொடர்புடைய மாவட்டப்பதிவாளரிடம் கோர்வைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

## 7.2. சீட்டுகள்

மாநிலத்தில் செயல்படும் சீட்டுகள் மற்றும் சீட்டு குழுக்களின் செயல்பாட்டினை **1982–**ம் ஆண்டு சீட்டு நிதிச்சட்டம் நிர்வகிக்கிறது. சட்ட விதிகளின்படி பதிவாளராக பதிவுத்துறைத் தலைவர் உள்ளார். மாநில அளவில் சீட்டுகள் தொடர்பான வேலைகள் கூடுதல் சீட்டுப் பதிவாளரால் கண்காணிக்கப்படுகின்றன. சீட்டுகள் மற்றும் சீட்டுக் குழுக்களின் நடைமுறைகள் தொடர்பாக எழும் சர்ச்சைகளை விசாரித்து உரிய தீர்ப்பாணைகளை வெளியிட சென்னை (வடக்கு மற்றும் தெற்கு), மத்திய சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மூன்று சீட்டு நடுவர்கள் இருக்கின்றனர். பிற பகுதிகளில் சீட்டு நடுவர்களாக மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்) செயல்படுகின்றனர். சீட்டு நடுவர்களின் தீர்ப்பாணைகளை எதிர்த்து அரசிடம் மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

தமிழகத்தில் **31.3.2018–**ல் **2,555** சீட்டு நிறுவனங்களும், அச்சீட்டு நிறுவனங்களால் **65,477** சீட்டு குழுக்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

## 7.3. கூட்டுப் பங்காண்மை நிறுவனங்கள்

1932–ம் ஆண்டு இந்திய கூட்டுப்பங்காண்மைச் சட்டத்தின்படி, மாவட்டப்பதிவாளர் (நிர்வாகம்) கூட்டு பங்காண்மை நிறுவனங்களின் பதிவாளர் ஆவார். கூட்டு பங்காண்மை நிறுவனங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளலாம். பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் அமைப்பில் ஏற்படும் மாற்றங்கள் பதிவாளரிடம் கோர்வை செய்யப்பட வேண்டும். இந்த சட்டத்தின் கீழ் பதியப்படும் நிறுவனங்கள், பதிவு செய்த பிறகு தொடர்ந்து செயல்பட்டு வருவது குறித்து, ஒவ்வொரு நிதியாண்டு முடிவடைந்த மூன்று மாதங்களுக்குள் பதிவாளரிடம் உறுதி மொழியைக் கட்டாயம் கோர்வை செய்திட வேண்டும்.

31.3.2018 வரை 5,77,025 கூட்டுப் பங்காண்மை நிறுவனங்கள் தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## 7.4 முத்திரைத்தாள் விற்பனையாளர்கள்

பொதுமக்களுக்கு சேவை செய்யும் பொருட்டு 10,000 மக்கள் தொகைக்கு, ஒரு முத்திரைத்தாள் விற்பனையாளர் என்ற விகிதத்தில்

நியமிக்கப்படுகிறார்கள். நாளது தேதியில் மாநிலத்தில் மொத்தம் **3421** முத்திரைத் தாள் விற்பனையாளர்கள் உள்ளனர்.

முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் பணியினை செம்மைப்படுத்த அவர்களின் கணக்குகள் கருவூலம் மற்றும் சம்பள கணக்கு அலுவலகக் கணக்குடன் மாதம் ஒருமுறை மாவட்டப் பதிவாளர்களாலும் வாரம் ஒரு முறை சம்மந்தப்பட்ட சார்பதிவாளர்களாலும் சரிபார்க்கப்படுகின்றன.

கேட்பு காசோலை, மின்னணு முத்திரைத்தாள் (e-Stamping) மற்றும் இணையவழி பணம் செலுத்தும் முறை (Online Payment) போன்றவற்றின் மூலமாகவும் முத்திரைத் தீர்வையை செலுத்தலாம்.

### 7.5 ஆவண எழுத்தர்கள்

ஆவண எழுத்தர்கள் ஆவணங்கள் தயாரிப்பதில் முக்கியப் பங்காற்றி வருகின்றனர். **1982**–ம் ஆண்டு தமிழ்நாடு ஆவண எழுத்தர் உரிம விதிகளின்படி, அரசு நடத்தும் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மட்டுமே

ஆவண எழுத்தர் உரிமம் வழங்கப்பட்டு வருகிறது. மாநில அளவிலான உரிமம், மாவட்ட அளவிலான உரிமம், சார்பதிவக அளவிலான உரிமம் என மூன்று வகை உரிமங்கள் வழங்கப்படுகின்றன.

ஆவண எழுத்தர்களின் எண்ணிக்கை **(31.3.2018–ல் உள்ளபடி):**

| | |
|---|---|
| மாநில உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்கள் | **2765** |
| மாவட்ட உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்கள் | **2046** |
| சார்பதிவக உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்கள் | **324** |
| **மொத்த உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்கள்** | **5135** |

ஆவணங்களை வழக்கறிஞர்கள் மற்றும் உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்கள் எழுதித் தரலாம். பொதுமக்கள் பதிவுத்துறையின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள ஆவண மாதிரிப் படிவங்களைப் பதிவிறக்கம் செய்து அதன்படி ஆவணங்களைத் தாங்களாகவே தயாரித்துக் கொள்ளலாம்.

## 7.6 திருமணப் பதிவு

2009–ம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம் அமல்படுத்தப்பட்ட பின்னர், மாநிலத்தில் நடத்தப்படும் அனைத்துத் திருமணங்களும் மணமகன் மற்றும் மணமகளுடைய சமய பாகுபாடின்றி, பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. **2017–18–**ஆம் ஆண்டில் **81,781** திருமணங்கள் இந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. **2017–18–**ஆம் ஆண்டில் **1955–**ம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தின் கீழ் **74,657** திருமணங்களும், **1954–**ம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டத்தின் கீழ் **8,702** திருமணங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றின் மீது கட்டணமாக ரூ.**1.88** கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. **1872–**ம் ஆண்டு இந்திய கிறித்துவ திருமணச் சட்டத்தின்படி, **2017–18–**ம் ஆண்டில் **5,101** திருமணங்கள் குறித்த சான்றிட்ட நகல்கள் வழங்கப்பட்டு, அதற்கு கட்டணமாக ரூ.**2.04** லட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

## 8. துறையில் தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி

### 8.1 இணையம் சார்ந்த ஒருமித்த மென்பொருள் உருவாக்கம்

கணினிமயமாக்கலில் முன்னோடியான பதிவுத்துறை பொதுமக்களுக்கு வழங்கி வரும் சேவைகளின் தரத்தை உயர்த்த இணையம் சார்ந்த வலை அடிப்படையிலான ஒருமித்த மென்பொருளை உருவாக்க முடிவு செய்தது. இந்த மென்பொருளானது, இணையவழி பரிமாற்றங்கள், இணையவழி பணம் செலுத்துகை, வருவாய் பதிவு விவரங்கள் இணையவழி சரிபார்த்திடுதல், மின்னணு கையொப்பமிட்ட சான்றிட்ட நகல்கள் இணையவழி அளித்திடுதல், மாநிலம் முழுமையிலும் சீரான மென்பொருள் மேம்பாடு போன்ற சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளது.

ஒருங்கிணைந்த வலை அடிப்படையிலான மென்பொருள் தயாரிப்பு, வன்பொருள் வழங்கல், நிறுவிடுதல், வலை இணைப்பு, அயலாக்க பணியமைப்பு முறை மூலம் சார்பதிவக சேவைகளை செயல்படுத்திடுதல், திட்டச் செயல்பாட்டு துவக்கத்திலிருந்து (Go Live) ஐந்து

ஆண்டு காலத்திற்கு வன்பொருள் மற்றும் மென்பொருள் பராமரிப்பு ஆகியவை உள்ளடக்கிய இத்திட்டத்தை செயல்படுத்திட திட்ட ஒருங்கிணைப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஸ்டார் **2.0** (STAR – Simplified and Transparent Administration of Registration) எனும் இத்திட்டம் **12.2.2018** அன்று துவக்கி வைக்கப்பட்டது.

**8.1.1 ஸ்டார் 2.0–ல் (https://tnreginet.gov.in) கீழ்க்கண்ட முதன்மையான சிறப்பம்சங்கள் முன்னிலைபடுத்தப்படுகிறது:**

பொதுமக்கள் மற்றும் சார்பதிவாளர்களின் நேரடி தொடர்பு அதிகப்படுத்தப்பட்டுள்ளதன் மூலம் இடைத்தரகர்களின் தலையீடு தவிர்க்கப்படுகிறது.

அ. தங்கள் வசம் உள்ள / வசமாக்கப்பட இருக்கும் சொத்தின் முக்கிய விவரங்களை எந்த இடைத்தரகருமின்றி அவர்களாலேயே

அளித்திடும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு தனியாகவும் ஆவண எழுத்தர்களுக்கு தனியாகவும் என தனித்தனி உள்நுழைவு ஏற்படுத்தி வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆ. உரிய சார்பதிவகத்தில் முன் நேர ஒதுக்கீட்டு முறை ஒருங்கிணைக்கப்பெற்றுள்ளது. இதன் மூலம் நேர சேமிப்பு, வரிசைக்கிரமமான பதிவு, பாகுபாடற்ற சீரான பதிவிற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது.

இ. மைய கணினியில் (central server) 1975 முதல் தரவுகள் (Data) உள்ளதால், அலுவலர்களின் மின்னணு கையொப்பமிட்ட வில்லங்கச்சான்றுகள் வழங்கப்படுகிறது.

ஈ. கணினிமயமாக்கப்பட்ட காலத்திற்கான சான்றிட்ட நகல்கள் இணையவழியாக பெற்றிட இயலும்.

உ. ஆவணப்பதிவின்போது வாங்குபவர், விற்பவர்,

சாட்சிகள், ஆவணம் திரும்பப் பெற்றுக்கொள்ளும் நபர் ஆகியோரது விரல் ரேகைகள் எடுக்கப்பட்டு சேமிக்கப்படுகிறது. இதன்மூலம் ஆவணதாரரால் பாதுகாப்பான முறையில் ஆவணத்தினை திரும்பப் பெறுவது உறுதி செய்யப்படுகிறது. சொத்தின் முன்னுரிமைதாரருக்கு எச்சரிக்கை செய்தியினை குறுஞ்செய்தியாக அனுப்பிடும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஊ. வங்கிகள் மூலம் இணையவழி கட்டணங்கள் செலுத்திடுதல் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

எ. கிராமப்புறங்களைப் பொருத்தவரை, தாலுகா/ கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்களுக்கு பட்டா மாறுதல் செய்வதற்கான படிவங்கள் இணையவழியாக அனுப்பிடுதல் மற்றும் இவ்விவரத்தினை குறுஞ்செய்தி மூலம் தாலுகா அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட ஒப்புகையுடன் ஆவணதாரருக்கு அனுப்பிடும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஏ. கட்டிட ஆய்வு, நில மதிப்பீடு விவரங்கள் குறுஞ்செய்தி மூலம் அறிந்திட இயலும்.

ஐ. ஆவணம் பதிவு முதல் ஆவணம் திருப்பி அளிக்கப்படும் வரை, நிலுவை ஆவணங்கள், வில்லங்கச்சான்று மற்றும் சான்றிட்ட நகல்களின் நிலைகள், மதிப்பு குறைவான ஆவணங்கள் முத்திரைத்தாள் தனித்துணை ஆட்சியருக்கு அனுப்பப்பட்ட விவரம் போன்ற விவரங்கள் குறித்த குறுஞ்செய்தி அனுப்பப்படுகிறது.

ஒ. மக்கள் தங்கள் குறைகளை தீர்ப்பதற்கும் சந்தேகங்களை நிவர்த்தி செய்திடுவதற்கும் கட்டணமில்லா தொலைபேசி எண் **1800–102–5174** ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஓ. மென்பொருளினை மேம்படுத்துவது மற்றும் மெருகேற்றுவது தொடர்பான ஆலோசனைகளை star2.0suggestions@tnreginet.net என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்.

ஔ. பணிப்பாய்வு அடிப்படையிலான அமைப்பு (Work

flow based system) ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

க. (1) பெருங்குடியிலுள்ள மாநில தரவு மையம் (2) சாந்தோமிலுள்ள பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம் மற்றும் (3) புனேயிலுள்ள பேரிடர் மீட்பு மையம் ஆகிய மூன்று இடங்களில் தரவுகள் சேமிக்கப்படுகின்றன.

## 8.2 இணைய நெறிமுறை புகைப்படக்கருவிகள் (IP camera)

சார்பதிவகங்களில் ஆவணம் மற்றும் திருமண பதிவு நடைமுறையினை தலைமை அலுவலகம் மற்றும் உரிய மண்டல அலுவலகங்களிலிருந்து தொலைக் கண்காணிப்பு செய்திட இணைய நெறிமுறை புகைப்படக் கருவிகள் நிறுவப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு சார்பதிவாளர் அலுவலகத்திற்கும் இரண்டு இணையநெறிமுறை புகைப்படக்கருவிகள் - ஒரு கருவி நுழைவாயிலை படம் எடுக்கும் வண்ணமும் மற்றொரு கருவி சார்பதிவாளர் இருக்கையினை படம் எடுக்கும் வண்ணமும் நிறுவப்பட்டுள்ளன.

## 8.3 இணைய வழியாக பணம் வங்கிகளில் செலுத்திடும் முறை

துறைக்கட்டணங்களை பாதுகாப்பான மற்றும் எளிதான முறையில் செலுத்திடும் நோக்கில் மற்றுமொரு கூடுதல் முறையாக இணையவழி / நேரடியாக, அங்கீகரிக்கப்பட்ட **11** வங்கிகள் மூலம் பணம் செலுத்திடும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இம்முறையின் மூலம் **31.3.2018** வரை **10,76,214** பரிவர்த்தனைகள் செய்யப்பட்டு ரூ.**1,338.12** கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

## 8.4 வில்லங்கச்சான்று எவ்விதக் கட்டணமுமின்றி இணையதளத்தில் பார்வையிடும் வசதி

சொத்து பரிமாற்றங்களில் வெளிப்படைத் தன்மையைக் கொணரும் பொருட்டும் சொத்து உரிமையாளர்கள் தங்களது சொத்து தொடர்பான விவரங்களை எந்த நேரத்திலும் ஆய்வு செய்திடவும் தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட சொத்து பரிமாற்ற விபரங்களை துறையின் இணையதளம் வழியாக எவ்வித

கட்டணமுமின்றி எங்கிருந்தும்/ எப்போதும் பார்வையிடும் வசதி தொடங்கப்பட்டுள்ளது.

**1987**லிருந்து நாளது தேதிவரை பதிவு செய்யப்பட்ட ஆவண விவரங்கள் மின்னணுமயமாக்கப்பட்டு அக்காலத்துக்குட்பட்ட வில்லங்கச்சான்றை கட்டணமின்றி இணையவழியாக பதிவிறக்கம் செய்யும் வசதி இருந்து வந்தது. தற்போது **1975** முதல் நாளது தேதிவரை பதிவு செய்யப்பட்ட ஆவண விவரங்கள் மின்னணுமயமாக்கப்பட்டு அக்காலத்துக்குட்பட்ட வில்லங்கச்சான்றை கட்டணமின்றி இணையவழியாக பதிவிறக்கம் செய்யும் வசதி விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**31.3.2018** வரை **1,12,35,922** பார்வையாளர்கள் எவ்விதக் கட்டணமுமின்றி வில்லங்கச் சான்றுகளை பதிவிறக்கம் செய்துள்ளனர்.

## 8.5 இணையவழி முன்பதிவு (e-visit)

பதிவு நடைமுறையை எளிமைப்படுத்தும் நோக்கில் இணையவழி முன்பதிவு (e-visit) பதிவு அலுவலருடன்

நேர ஒதுக்கீடு பெறுவதற்கான வலை அடிப்படையிலான தொகுதி STAR 2.0-ல் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. **31.3.2018** வரை **2,83,912** பயனாளிகள் இச்சேவையை பயன்படுத்தியுள்ளனர்.

**8.6 மின்னணு பதிப்பு முறை (e-Stamping)**

மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, முத்திரைத் தீர்வையை செலுத்த மாற்று வழியாக மின்னணு பதிப்பு முறையானது திருவாளர்கள் SHCIL (Stock Holding Corporation of India Limited) மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்நடைமுறை மூலம் ஒரே ஒரு முத்திரைச்சான்றை எந்த மதிப்பிற்கும் மின்னணு பதிப்பு முறையாக பயன்படுத்தலாம். இதனை விற்பனை, அடமானம் போன்ற எந்த ஒரு ஆவணத்திற்கும் முத்திரைத்தாளுக்கு மாற்றாக பயன்படுத்திடலாம். இதில் கணினி மூலம் தோற்றுவிக்கப்பட்ட ஒரு தனித்துவமான எண் (unique number) இருக்கும்.

இத்திட்டம் **2010** முதல் சென்னையில் உள்ள **9** சார்பதிவகங்களில் முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்பட்டு, **2011** முதல் சென்னை மண்டலம் முழுவதும் அனைத்து சார்பதிவகங்களிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மின்னணு பதிப்புமுறை தமிழகத்தின் அனைத்து மாநகராட்சி பகுதிகளிலுள்ள **56** சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு அறிமுகப்படுத்த நடவடிக்கையில் உள்ளது.

SHCIL நிறுவனத்தின் அலுவலகங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வசூலிப்பு மையங்களாக நியமிக்கப்பட்ட வங்கிகளில் மின்னணு முத்திரைத் தாள்கள் கிடைக்கும்.

மின்னணு முத்திரை வசூல் விபரம்:

| **வருடம்** | **வழங்கப்பட்ட மின்னணு முத்திரை எண்ணிக்கை** | **தொகை (ரூ. கோடியில்)** |
|---|---|---|
| **2010–11** | **1206** | **24.11** |
| **2011–12** | **6478** | **113.74** |
| **2012–13** | **11924** | **180.90** |

| | | |
|---|---|---|
| 2013–14 | 32121 | 253.90 |
| 2014–15 | 67062 | 236.94 |
| 2015–16 | 82384 | 347.78 |
| 2016–17 | 100587 | 246.02 |
| 2017–18 | 120029 | 216.68 |

## 8.7 வலை நிழலி (Web-Cam) மற்றும் மின்னணு ரேகைக் கருவி (Bio metric device)

பதிவு நடைமுறையின் போது வலைநிழலி (Web-Cam) மற்றும் மின்னணு ரேகைக் கருவி (Bio metric device) மூலம் புகைப்படம் மற்றும் விரல் ரேகை மின்னணு முறையில் பதிவு செய்யப்படுகிறது. பதிவின் போது மனிதத் தவறுகள், ஆள்மாறாட்டம், போலி நடவடிக்கைகள் ஆகியவற்றினைத் தவிர்த்திட வழிவகை செய்கிறது. வலை நிழலி மற்றும் மின்னணு ரேகைப்பதிவு சாதனங்கள் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் நிறுவப்பட்டு உபயோகத்தில் உள்ளன.

## 8.8 CUG இணைப்புகள் (CUG connections)

சரியான நேரத்தில் பாதுகாப்பான முறையில் விரைவான தகவல் பரிமாற்றத்திற்கு ஒருங்கிணைந்த அலகுக்குழு (Closed Unit Group) கையடக்க அலைபேசி இணைப்புகள் அனைத்து பதிவுத்துறை அலுவலர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளன.

## 9. துறையின் உள்கட்டமைப்பு மற்றும் வசதிகளில் மேம்பாடு

### 9.1 கட்டடங்கள் கட்டுதல்

வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் அனைத்து பதிவுத்துறை அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். 2011–2013-ஆம் ஆண்டுகளில் 29 சார்பதிவாளர் அலுவலகங்களை உள்ளடக்கிய 17 ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகங்கள் மற்றும் தனித்தனியாக 100 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் ரூ.74.90 கோடி செலவில் கட்டப்பட்டு செயல்பாட்டில் உள்ளன. தனித்தனியாக 60 சார்பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் 21 சார்பதிவாளர்

அலுவலகங்களை உள்ளடக்கிய **8** ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகங்கள் ரூ.**51.62** கோடி மதிப்பீட்டில் முதற்கட்டமாக கட்டப்பட்டு வருகின்றன. இரண்டாவது கட்டமாக **17** சார்பதிவாளர் அலுவலகங்கள் ரூ.**14.58** கோடி மதிப்பீட்டில் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 9.2 தீயணைப்பான்கள் வழங்குதல்

பதிவுத்துறையில் பேணப்படும் அனைத்து பதிவுருக்களும் நிரந்தரமான பதிவுருக்கள் என்பதால் அவற்றை தீ விபத்திலிருந்து பாதுகாப்பது அவசியமாகும். எனவே பதிவுத்துறையில் உள்ள **9** துணைப்பதிவுத்துறைத்தலைவர் அலுவலகங்கள், **50** மாவட்டப்பதிவாளர் அலுவலகங்கள், **575** சார்பதிவாளர் அலுவலகங்கள், **11** மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித்துணை ஆட்சியர் (முத்திரை) அலுவலகங்கள் மற்றும் சென்னையில் உள்ள பதிவுத்துறை பயிற்சி நிலையம் ஆகிய அலுவலகங்களுக்கு தீத்தடுப்பு உபகரணங்கள்


கொள்முதல் செய்யப்பட்டு, தீத்தடுப்பு குறித்த பயிற்சிகள் பதிவுத்துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.


## 10. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005


தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி 2017ஆம் ஆண்டில் இத்துறையில் பெறப்பட்ட 15,679 மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு, அனைத்து மனுக்களுக்கும் தகவல்கள்/உரிய பதில்கள் அளிக்கப்பட்டு, ரூ.1,63,898/- கட்டணமாக வசூலிக்கப்பட்டது.


**கே.சி. வீரமணி**

**வணிகவரித் துறை அமைச்சர்**


வருவாய்
(ரூ. கோடியில்)
தொகை (ரூ.கோடியில்)
10000
8000
6000
4000
2000
0
8055.74
8279.64
8562.38
7007.74
9121.53
2013–14
2014–15
2015–16
2016–17
2017–18
நிதி ஆண்டு


ஆவணப்பதிவு
ஆவணங்களின் எண்ணிக்கை
3000000
2500000
2000000
1500000
1000000
500000
0
2653291
2573931
2528561
2027916
2210595
2013-14
2014-15
2015-16
2016-17
2017-18
நிதி ஆண்டு


வருவாய் (ரூ.கோடியில்)
2017–18, 9121.53
2013–14, 8055.74
2016–17, 7007.74
2014–15, 8279.64
2015–16, 8562.38


ஆவணப் பதிவு
2017–18, 2210595
2013–14, 2653291
2016–17, 2027916
2014–15, 2573931
2015–16, 2528561




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 12.02.2018 அன்று பதிவுத்துறை சாபில் உருவாக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வலை அடிப்படையிலான “ஸ்டார் 2.0” (Simplified and Transparent Administration of Registration - STAR 2.0) திட்டத்தினையும், அதற்காக மேம்படுத்தப்பட்ட www.tnreginet.gov.in என்ற இணையதளத்தையும் துவக்கி வைத்தார்கள்.




மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட
இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி சார்பதிவாளர் அலுவலகம்.



ஆவணதாரரின் மின்னணு கை விரல் ரேகை பதிவின் போது
பரமக்குடி சார்பதிவாளர் அலுவலகம்.




மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட
கடலூர் மாவட்டம் புவனகிரி சார்பதிவாளர் அலுவலகம்.



ஆவணதாரரின் மின்னணு கை விரல் ரேகை பதிவின் போது
புவனகிரி சார்பதிவாளர் அலுவலகம்.




மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட
திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டு சார்பதிவாளர் அலுவலகம்.



ஆவணதாரரின் மின்னணு கை விரல் ரேகை பதிவின் போது
பள்ளிப்பட்டு சார்பதிவாளர் அலுவலகம்.